ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/15 - 2015 ජූනි මස 10 වැනි බදාදා - 2015.06.10

*1918/15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் கண்டி கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் பிரதான பம்பும் இல்லம் நிர்மாணித்தல் பொருட்டு காணிப் பிரிவொன்றை கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக் கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 04.
5/2/1/1125

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், கண்டி மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவில், முல்கம்பொல கிராம அலுவலர் பிரிவின், வெல் அட்ட கிராமத்தில் அமைந்துள்ள போகஹயடபேல எனும் காணியில் சுமார் 13.85 பேர்ச்சஸ் (திட்ட இல. 1771 ஏ இன் துண்டு இல. 6) மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

| | | |
|---|---|---|
| வடக்கு - கிழக்கு | : | இத்திட்டத்தின் துண்டு இல. 4 (வலவ்வெவத்தை மாற்றுப் பெயர் போகஹபலெஸ்ஸ மற்றும் போமலுவகும்புர கொண்ட) மற்றும் இந்த திட்டத்தின் துண்டு இல. 7 ; |
| தெற்கு - கிழக்கு | : | உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜே. சீஜொங்க்ளாஸ் அவர்களால் அளவையிடப்பட்ட திட்ட இல. 2938 இல் அமைந்த துண்டு இல. 7சீ இனை உடைய பகுதி ; |
| தெற்கு - மேற்கு | : | அடிப்படைத் திட்ட இல. மஹ 3859 இல் உள்ள துண்டு இல. 14 மற்றும் 15 ; |
| வடக்கு - மேற்கு | : | இந்த திட்டத்தின் துண்டு இல. 5 மற்றும் 3 . |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 01. திரு. மஹிந்த கடுகஹ,
இல. 39/4- 13/3, ரஜபிஹில்ல மாவத்தை,
கடுகஸ்தோட்டை,
கண்டி.

6- 694



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.